

ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3, ஈவின் ரோடு, சூரம்பட்டி நால்ரோடு பகுதியில் உள்ள தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய அலுவலகத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமில் சொத்து வரி பெயர் மாற்றம் மற்றும் காலியிடம் வரி விதிப்பு வேண்டி கோரிக்கை மனு அளித்த மனுதாரரின் மனுவின் மீது உடனடி தீர்வாக உரிய ஆணையினை வீட்டுவசதி மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி வழங்கினார். நிகழ்வில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மேயர் நாகரத்தினம், மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின், துணை மேயர் வி.செல்வராஜ், மாநகரக் கழக செயலாளர் மு.சுப்ரமணியம், மாமன்ற உறுப்பினர் விஜயலட்சுமி மணி, பெரியார்நகர் கே..சந்திரசேகர் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தலைவாசல் தொகுதி செ.குணசேகரன்–திருமதி தங்கம் ஆகியோரின் இல்லத் திருமண விழாவினையொட்டி அமைச்சர் கோவி.செழியன் நேரில் வீட்டிற்கு வந்து மணமக்கள் டாக்டர் சூர்யா மற்றும் டாக்டர் ஓம்பிரகாஷ் ஆகியோரை வாழ்த்தினார். இதில் ஜெயபாலன், பாஸ்கரன், சின்னப்பையன், சங்கரைய்யா, தேவேந்திரன், திருமுருகவேள், மாயக்கிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அரசியல் கட்சிகளின் பேச்சுரிமை உள்பட

# அடிப்படை உரிமைகள் மீறப்படாமல் இருக்க வேண்டும்!

## பிரச்சாரம் செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பது குறித்து

## அனைத்துக்கட்சிக் கூட்டத்துக்குப் பின் – கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!

சென்னை, நவ.8-

கரூரில் கடந்த செப்டம்பர் 27-ஆம் தேதி தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் பங்கேற்ற பிரசாரக் கூட்டத்தில் நெரிசல் ஏற்பட்டு 41 பேர் உயிரிழந்தனர். ஏராள மானோர் காயம் அடைந்தனர்.

இனி இதுபோன்ற சம்பவம் நடைபெறாமல் இருக்க அரசியல் கட்சி பொதுக் கூட்டங்கள் பிரசாரங்களுள், ரோடு ஷோ நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தும் போது அசம்பாவிதங்கள் நிகழாமல் இருக்க அனைவருக்கும் அனுமதி வழங்குவதற்கான வழிகாட்டு நெறிமுறைகளை வகுத்து சமர்ப்பிக்க வேண்டும் என அரசுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன் அடிப்படையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் சில நாட்களுக்கு முன்பு வழிகாட்டுதல்களை உருவாக்க ஆலோசனை நடத்தப்பட்டது.

அதைத் தொடர்ந்து நேற்று சென்னை தலைமை செயலகத்தில் அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது. தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப் பட்ட கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற சட்டசபை உறுப்பினர்களைக் கொண்ட கட்சியின் பிரதிநிதிகளுடன் இந்த ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதில் அரசு சார்பில் மூத்த அமைச்சர்கள் கே.என்.நேரு, எஸ்.ரகுபதி, மா. சுப்பிரமணியன் மற்றும் தலைமை செயலாளர் முருகானந்தம், உள்துறை செயலாளர், டி.ஜி.பி. உள்ளிட்டோர்



கலந்து கொண்டனர்.

தி.மு.க. கூட்டணி சார்பில் ஆர்.எஸ். பாரதி, என்.ஆர்.இளங்கோ எம்.பி. உள்பட பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள், தலைவர்கள் பங்கேற்று கருத்துகளை தெரிவித்தனர்.

பிரசார கூட்டங்களுக்கான விதிகள் அனைத்து கட்சிகளுக்கும் ஒரேமாதிரி இருக்க வேண்டும் என்று பலர் வலியுறுத்தினார்கள்.

**கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி பேட்டி!**

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட கழக அமைப்புச் செயலாளர் ஆர். எஸ்.பாரதி நிருபர்களிடம் கூறியதாவது:-

அரசியலமைப்பு சட்டபடி நிபந்த னைகளை வகுக்கலாம் என்று கூறி உள்ளோம். அரசியல் கட்சியின் அடிப்படை உரிமையான பேச்சுரிமை, எழுத்துரிமை பாதுகாக்கப்படும் வகையில் நிபந்தனைகளை வகுக்க வேண்டும். அதன் அடிப்படையில் நீதிமன்ற உத்தரவுக்கு ஏற்ப தி.மு.க. நடந்து கொள்ளும்.

**அடிப்படை உரிமைகளை மீறக் கூடாது!**

எந்த நிபந்தனைகள் விதித்தாலும், அடிப்படை உரிமை கள் மீறப்படாமல் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். அந்த வகையில் அரசு போடுகின்ற உத்தரவுகள், நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப் படும் பரிந்துரைகள் அடிப்படை உரிமைகளை மீறாமல் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் தி.மு.க. தனது கருத்தை பதிவு செய்தது. அடிப்படை உரிமை பொருள் 19/1பி மீறாத வகையில் எந்த நிபந்தனைகள் விதிக்கப்பட்டாலும் தி.மு.க.அதை ஏற்றுக்கொள்ளும். இன்று எடுக்கப்படும் முடிவு, நீதிமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வாறு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேட்டியளித்தார்.

### கும்பகோணத்தில் 11 திருக்கோவில்களின் தேரோடும் வீதிகளில்

# ரூ.15 கோடி மதிப்பீட்டில் மின்சார புதைமின்தடம்!

## சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

தஞ்சாவூர், நவ.8-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில் கும்பகோணத்தில் 11 திருக்கோவில்களின் தேரோடும் வீதிகளில் சுமார் 15 கோடி மதிப்பீட்டில் மின்சார புதைமின்தடம் அமைக்கும் பணி தொடங்கப் பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், கும்பகோணத்தில் மாசிமகப் பெருவிழா ஆண்டு தோறும் கும்பகோணத்தில் சைவ மற்றும் வைணவ தலங்கள் இணைந்து பத்து நாட்களுக்கு சிறப்பாக நடைபெறுவது வழக்கம், இவ்விழா தொடர்புடைய பனிரெண்டு சிவாலயங்களில் ஆதிகும்பேஸ்வரர், காசிவிஸ்வநாதர், வீரசைவ மடம், காளஹஸ்தீவரர், கௌதமேஸ்வரர், அபிமுகேஸ்வரர், நாகேஸ்வரன், சோமேஸ்வரர், மற்றும் கௌதமேஸ்வரர், சாரங்கபாணி, சக்கரபாணி உள்ளிட்ட 11 திருக்கோயில்களின் தேரோடும் வீதிகளில் மின்சார புதைமின்தடம் அமைக்கும் வேண்டும் என கும்பகோணம் சட்டமன்ற உறுப்பினர் சாக்கோட்டை க.அன்பழகன் சட்டமன்றத்தில் கோரிக்கை விடுத்தார்.

கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், துணைமுதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், உத்தரவின் பேரில் அறநிலையத் துறை அமைச்சர் பி. கே.சேகர்பாபு பரிந்துரையின் கீழ் மின்வாரிய நிதியிலிருந்து ரூபாய் 15 கோடி மதிப்பீட்டில் மின்சார புதைமின்தடம் அமைக்கும் பணியினை தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ, தொடங்கி வைத்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி துணை மேயர் மாநகர செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் டி.கணேசன், ஜெ.சுதாகர், பகுதிச் செயலாலளர்கள் டி.வி. கிருஸ்ணமூர்த்தி, எஸ். செல்வராஜ், கல்யாணசுந்தரம், கண்ணன் மற்றும் மாநகர கழக நிர்வாகிகள், மண்டலக் குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் மின்சார வாரிய தலைமை பொறியாளர் நளினி, மேற்பார்வை பொறியாளர் சித்ரா, செயற்பொறியாளர்கள் வேல்முருகன், கலையரசி உதவி செயற்பொறியாளர் ஸ்டாலின் கலந்து கொண்டனர்.

### தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

# மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

## தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை தலைவர் வாகை சந்திரசேகர் அறிவிப்பு!

**கழகத் தலைவர்** அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர் ஒப்புதலோடு, தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் - செ.சண்முகசுந்தரம், 19, வடக்கு வீதி, காந்திபுரம், நம்பியூர்.

துணைத் தலைவர் - பி.கே.காளியப்பன், சீதாலட்சுமி, கோபி.

அமைப்பாளர் - கே.எஸ்.சங்கர்சிவகுமார், சங்கரன் தோட்டம், கா.கணபதிபாளையம், அளுக்குளி, கோபி.

துணை அமைப்பாளர்கள் - 1) ப.பூபாலன், கே.ஜி.திருமண மண்டபம், புளியம்பட்டி, சத்தி. 2) எஸ்.ரமேஷ்செல்வன், குருமந்தூர் மேடு, நம்பியூர். 3) எம்.சதாசிவம், 26-பி, பிள்ளையார் கோவில் தெரு, சத்தி.

4) கு.ப.முருகசாமி, 188/21 புளியம்பட்டி ரோடு, நம்பியூர். 5) என்.டி.மகேந்திரன், 21/1, காந்திபுரம், ல.கள்ளிப்பட்டி, கோபி. 6) என்.காமராஜ், 166/7, கருப்பணன் வீதி, பதிபாளையம், சிறுவலூர், கோபி.

### விருதுநகர் வடக்கு மாவட்டம்

#### சிவகாசி மாநகரம்

தலைவர் - ஆர். செல்வம் 467, முத்து மாரியம்மன் காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

துணைத் தலைவர் - க. அரவிந்த் 1479, பி.கே.என். ரோடு, சோலை காலனி, சிவகாசி கிழக்கு - 626189, விருதுநகர் மாவட்டம்.

அமைப்பாளர் - இரா. அழகு முத்துமாரியம்மன் காலனி, பள்ளபட்டி ரோடு, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) பெ. பாரதி 32, மேலரத வீதி, சிவகாசி - 626123, விருதுநகர் மாவட்டம். 2) ஜோ. ஆசிர்வாதம் 486, பாரதி நகர் 4வது தெரு, சிவகாசி கிழக்கு - 626189, விருதுநகர் மாவட்டம். 3) பி. சுப்பிரமணியன் 147ஏ, அம்மன் கோவில்பட்டி நடுத் தெரு, சிவகாசி கிழக்கு - 626189, விருதுநகர் மாவட்டம். 4) இரா. பாலாஜி சி-69, ஆலாவூரணி, அண்ணா காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம். 5) எம். செல்வம் 108, ஆலாவூரணி, அண்ணா காலனி, திருத்தங்கல், விருதுநகர் மாவட்டம்.

### திருப்பூர் மத்திய மாவட்டம்

#### திருப்பூர் தெற்கு மாநகரம்

திருப்பூர் மத்திய மாவட்டம், திருப்பூர் தெற்கு மாநகர கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக பணியாற்றி வந்த ரஜினி செந்தில் அவர்கள் திருப்பூர் மத்திய மாவட்ட அமைப்பாளராக நியமிக்கப்பட்டதால் அவருக்கு பதிலாக **க. சுரேஷ்** (3, தென்னம்பாளையம் கிழக்கு, வெள்ளியங்காடு 2வது வீதி, திருப்பூர் - 641604) அவர்கள் திருப்பூர் தெற்கு மாநகர கலை, இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 06-11-2025.

**வாகை சந்திரசேகர்**
தலைவர்
தி.மு.க. கலை இலக்கியப் பகுத்தறிவு பேரவை

# நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிவிப்பு!



நாமக்கல், நவ. 8-

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக செயற்குழு கூட்டம் இன்று நடைபெறுகிறது என்று நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் கே.எஸ்.மூர்த்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:

நாமக்கல் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம் இன்று (08.11.2025-சனிக்கிழமை) மாலை 4 மணிக்கு திருச்செங்கோட்டில் உள்ள நாமக்கல் மேற்கு மாவட்ட கழக அலுவலகம் தளபதி அரங்கில் மாவட்ட அவை தலைவர் இரா.நடனசபாபதி தலைமையில் நடைபெற உள்ளது. ,

அது சமயம் இக்கூட்டத்தில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து சார்பு அணி அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்.

பொருள் : வரும் 11 ஆம் தேதி எஸ்.ஐ.ஆர் (SIR)க்கு எதிரான போராட்டம் நடத்துவது தொடர்பாக,

வரும் நவம்பர் 27 ல் கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பிறந்தநாள் கொண்டாடுவது குறித்து,

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில் கும்பகோணத்தில் 11 திருக்கோவில்களின் தேரோடும் வீதிகளில் சுமார் 15 கோடி மதிப்பீட்டில் மின்சார புதைமின் தடம் அமைக்கும் பணியை தஞ்சை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, ஒன்றியச் செயலாளர்கள் உள்ளூர் டி.கணேசன், ஜெ.சுதாகர், பகுதிச் செயலாளர்கள் டி.வி.கிருஷ்ணமூர்த்தி, எஸ்.செல்வராஜ், கல்யாணசுந்தரம், கண்ணன் மற்றும் மாநகர கழக நிர்வாகிகள், மண்டலக் குழு உறுப்பினர்கள், மாமன்ற உறுப்பினர்கள், மற்றும் கழக நிர்வாகிகள், மின்சார வாரிய அதிகாரிகள் உள்ளனர்.

